# இலங்கையின் தபால் வாக்களிப்பு செயல்முறை பற்றிய ஒரு பார்வை

தபால் வாக்கு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுதல் மற்றும் அதன் பின்னணியை ஆராய்தலும் அதற்கான பரிந்துரைகளும் - 2022

**சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு**
**(PAFFREL)**

தேர்தலுடன் தொடர்புடைய விடயப் பரப்பில் ஆய்வுகளை மேற்கொண்டு வருபவரான திரு மஞ்சுல கஜநாயக்க ப.ஃவ்ரல் அமைப்பு சார்பாக, அந்த அமைப்பின் அழைப்பின் பேரில் இந்த ஆய்வறிக்கையைத் தயாரித்துள்ளார். இதன் முதலாவது வரைவுக்காக தனது கருத்துகளையும் யோசனைகளையும் வழங்கிய தேர்தல் ஆணையாளர் நாயகம் திரு சமன் ஸ்ரீ ரத்நாயக்கவுக்க எமது நன்றியைத் தெரவித்துக்கொள்கிறோம்.

## தோற்றம்

முழுமை பெற்ற ஒரு தேர்தல் முறை இருக்கவேண்டியதன் எதிர்ப்பார்ப்பு பற்றிய எண்ணக்கரு 18 நூற்றாண்டின் தொடக்கத்திற்கும் அப்பால் நீண்டு செல்கிறது. ஆனால், மக்கள் விருப்பத்தை அப்படியே பிரதிபலிக்கும் தேர்தல் முறையொன்றை உருவாக்குவது மிகவும் கடினமான ஒரு முயற்சி என்பதே உண்மை. எமது நாடு தேர்தல்களில் வரலாறு படைத்திருந்தாலும் எமக்குத் தெரிந்த தேர்தல் முறைகள் பற்றிய கருத்துகள் கலப்புத் தன்மையானவை ஆகும். அது எந்த அளவுக்கு அறிவியல் பூர்வமானது என்றால், அனேகமாக பிரதான தேர்தல்களுடன் சம்மந்தப்பட்ட பிரசார நடவடிக்கைகளில் ''தற்போதுள்ள தேர்தல் முறை திருத்தப்படும்'' என்ற விவகாரம் அதிக கவனம்பெற்ற தேர்தல் பிரசாரமாக இருந்துள்ளது.

அதைவிடவும், எமது நாட்டில் அரசியலமைப்பு ரீதியான இடையீட்டுடன் ஒட்டுமொத்த முறையில் மாற்றத்தை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகளுக்கு பஞ்சமில்லை. அந்த முயற்சிகள் தேர்தல் முறைத் திருத்த விவகாரத்தில் சாதகமான யோசனைகளை முன்வைத்திருந்தாலும், இன்றும்கூட அந்தத் திருத்தங்கள் ஆவணங்கள் வடிவிலிருந்து நடைமுறைப் பயன்பாட்டுக்கு வரவில்லை. அதுமாத்திரமன்றி, உலகத்தில் ஒன்றுக்கொன்று சமனற்ற நடைமுறைகளைக் கொண்டுள்ள தேர்தல் முறைகளை அவதானிக்க முடிவதோடு, அவை பிரத்தியேகமான செயல் நடைமுறைகளையும் சட்டப் பயன்பாட்டையும் கொண்டுள்ளன. வாக்களிப்பு அதில் மிகவும் கவனத்தை பெறுகின்ற தீர்க்கமான காரணியாக உள்ளது. உலகத்திலுள்ள எத்தகைய தேர்தல் முறையாக இருப்பினும், வாக்களிப்புடன் சம்பந்தப்பட்ட செயல்பாடுகளின் நேர்த்தியானது மிகுந்த கவனத்திற்கு உரியதாகவும் சிறப்பாக திட்டமிடப்பட்டும் இருக்க வேண்டும்.

அந்தவகையில் எமது நாட்டின் தேர்தல்முறை முழு அளவில் பாரம்பரியமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள பொதுவான ஒரு வழிமுறையைக் கொண்டு உருவாக்கப்பட்டிருப்பதோடு, அதன் ஒருசில பகுதிகள் டிஜிட்டல்மயப்படுத்தலைக் கண்டு வருகின்றன. வாக்களிப்பு முறையை ஆராயும்போது அது முற்றும் முழுவதுமாக ஒரு சாதாரண வழிமுறையில் அமைந்துள்ளதைக் காணலாம். நாட்டில் அதற்கான சட்டங்கள் உள்ளன. அதுபற்றி முறையாக விபரிக்கப்பட்டுள்ள 1946 ஆண்டு இலங்கை அரசு (பாராளுமன்றத் தேர்தல்கள்) கட்டளைச் சட்டத்தின் உள்ளடக்கத்தை ஆரம்பம்போது ஒரு விடயம் தெளிவாகிறது. அதாவது, அன்று தொடக்கம் இன்று வரை இந்தச் சட்டத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கொண்டுவரப்படவில்லை. அதைவிட புதிய உலகப் போக்குகளும் தேர்தல் நடைமுறைகளில் பாரிய தாக்கத்தைச் செலுத்தியுள்ளன. *கோவிட்-19* உலக பெருந்தொற்று இதன் சமீபத்திய நிகழ்வாக பார்க்கப்படுகிறது. அது இரண்டு வருடங்களுக்கும் மேலாக உலகத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதோடு, மக்களின் வாழ்வியலுக்கு அடுத்தப்படியாக அந்தந்த நாடுகளின் இருப்பையும் பாதித்தது. அந்தப் பாதிப்புகளில் தேர்தல்கள் முதன்மையானவை. உதாரணமாக உலகத்திலுள்ள கிட்டத்தட்ட 60 நாடுகள் சட்டப்படியாக நடத்தவேண்டிய தேர்தல்களை பிற்போட்டன. இன்றேல், பாரம்பரிய வழிமுறைகள் பற்றிய புதிய அணுகுமுறையுடன் செயல்படத் தொடங்கின.

அது சம்பந்தப்பட்ட சில எடுத்துக்காட்டுகள் இங்கே தரப்படுகின்றன. 2020இல் இலங்கையில் நடத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் அதில் ஒன்றாகும். தேர்தல் அறிவிப்பொன்று வெளியாகி, அதிகபட்சமாக 75 நாட்களுக்குள் நடத்தி முடிக்க வேண்டிய தேர்தலுக்கான பிரசார கால எல்லை 156 நாட்களாகும். 2010 மார்ச் 22 திகதி நடத்தப்பட்ட, தென்கொரிய சட்டமன்றத்திற்கான உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் தேசியத் தேர்தல் இதற்கு எதிர்மாறாக காணப்பட்டது. அது முதல் தடவையாக பிற்போடப்பட்டதும் இரண்டாவது தடவை நடத்தப்பட்டதும் தேவையான பாதுகாப்பு வழிமுறைகள் பின்பற்றப்பட்டதன் பின்னர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் இங்கு ஒரு விசித்திரமும் நிகழ்ந்தது. அதாவது, வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த எல்லா வாக்காளர்களுக்கும் மிகவும் எளிமையான மற்றும் பாதுகாப்பான சூழமைவை ஏற்படுத்தும் வகையில் முன்கூட்டியே வாக்களிக்க ஊக்கமளிக்கப்பட்டது.

அந்த முயற்சி பலனளித்ததோடு, தேர்தலின் முடிவில் தேர்தல் தினத்துக்கு முன்னர் 26.8 சதவீத வாக்காளர்கள் வாக்களித்திருந்தனர். இங்கு கவனத்தில் எடுக்கவேண்டிய ஒரு முக்கிய விடயம் உள்ளது. அதாவது, அந்த நாட்டில் அதுபோன்ற ஒரு நிலைமைக்கு வாக்காளர்களை இட்டுச்செல்லும் வகையில் சம்பந்தப்பட்ட சட்டங்கள் ஏறகனவே இயற்றப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அவ்வாறான எதிர்பாராத ஒரு

இடர் நிலையிலும்கூட, ஒரு தேர்தலை உரிய நடைமுறைகளைப் பின்பற்றி நடத்துவதற்காக உலகத்திலுள்ள தேர்தல் முகாமை நிறுவனங்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றமை இங்கே கவனம் பெறுகிறது. அந்தப் பின்னணியில் இலங்கையில் தபால் வாக்களிப்பு செயல்முறை பற்றி ஆராய்தல் காலத்தின் தேவையாகவும் எதிர்காலத்திற்கு பொருத்தமானதாகவும் உள்ளது.

## வாக்களிக்கும் முறைகள்

தேர்தல் என்பது மிகப்பெரிய ஒரு நடவடிக்கை. ஆகவே அப்படியான ஒரு பாரிய மற்றும் தீர்மானம் மிக்க நாளை முன்னிட்டு அவசியமான பல நடவடிக்கைகள் எடுக்கப்படுவதன் நோக்கம் வாக்களிப்பு செயல்முறையை தீவிரமாக மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு ஆகும். இதில், எல்லா வாக்காளர்களுக்கும் சமவாய்ப்பு கிடைக்கின்றதா என்பதும் எவரும் பாதிக்கப்படக்கூடாது என்பதும் முக்கிய கவனம்பெறும் விடயமாக உள்ளது. மேலும், இதற்காக பின்பற்றப்படும் எந்தவொரு வழிமுறையும் மனித உரிமைகளை மீறாமலும் ஜனநாயகத்தின் பெறுமதிகளை பாதுகாப்பதாகவும் இருக்க வேண்டும். அதேபோல் மக்களின் நம்பிக்கையை வென்ற ஒரு வழிமுறை இருக்க வேண்டியதும் அவசியமாகும். ஆனால் அத்தகைய எந்தவொரு வழிமுறையும் பலனளிக்கத் தவறும் ஒரு வலுவான காரணி உள்ளது. அது வாக்களிப்பு முறையில் காணப்படும் சிக்கல்வாய்ந்த தன்மை. ஆகவே, இதில் அடங்கும் எல்லா நடவடிக்கைகளும் எளிமையாக இருக்கவேண்டும் என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்கமுடியாது.

உலகத்தில் நடைமுறையில் உள்ள வாக்களிப்பு முறைகளை ஆராயும்போது, அவை பிரதானமாக இரண்டு விதமாக உள்ளன. அதாவது, Absentee Voting or Voting by Mail Early Voting என. இந்த இரண்டிற்குமிடையில் குறிப்பிடத்தக்க பாரதூரமான வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

## Absentee Voting (தேர்தல் தினத்தன்று வாக்களிக்கத் தவறும் வாக்காளர்கள்)

தேர்தல் தினத்தன்று ஏதேனும் அவசர நிலைமை காரணமாக வாக்களிக்கும் வாய்ப்பை தவற விடுகின்ற வாக்காளர்கள் வாக்களிக்க இதன் மூலம் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அனேகமாக தபால் மூலம் அல்லது வாக்களிப்பதற்காக பிரத்தியேகமாக தயார் செய்யப்பட்ட அதுவும் இல்லாவிடின் அறிவிக்கப்பட்ட ஒரு சாதனம் / பெட்டியினுள் குறியீடு இடப்பட்ட வாக்குச் சீட்டை இடுவதற்கு இதன்மூலம் வாய்ப்பு கிடைக்கின்றது. திடீரென நோய்வாய்ப்படுபவர்களும் மாணவர்களும் இந்த வாய்ப்பைப் பெறுவர். இதற்கான சட்ட விதிகளும் நடவடிக்கை முறைகளும் பெரும்பாலும் ஒரே தன்மையைக் கொண்டிருப்பதில்லை. ஐக்கிய அமெரிக்கா உட்பட சில நாடுகள் இந்த வழிமுறையை பரவலாகப் பயன்படுத்துகின்றன. இங்கு கவனிக்கத்தக்க விடயம் யாதெனில், அந்தந்த மாநிலங்களில் பின்பற்றப்படும் செயல் நடைமுறைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாக இருக்கும்.

## Early Voting முன்கூட்டிய வாக்களிப்பு

இது Advance Voting என்றும் அழைக்கப்படுகிறது. முன்கூட்டியே வாக்களிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒரு காலப்பகுதியில் வாக்களித்தல் இதன் சிறப்பம்சம் ஆகும். அங்கவீன நிலையில் உள்ள ஆட்கள் மற்றும் பிற மத நம்பிக்கைகள் அல்லது சில காரணங்களால் வாக்களிப்பு நிலையத்திற்கு செல்ல முடியாதவர்களுக்கு இதன்மூலம் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

இவ்விரு முறைகளையும் எளிமையாக புரிந்து கொள்வதற்காக, உள்ளடக்கம் பற்றிய சில தகவல்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

| தற்காலிக காரணங்களால் தேர்தல் தினத்தன்று வாக்களிக்கத் தவறும் நபர்களின் வாக்களிப்பு | முன்கூட்டிய வாக்களிப்பு |
|---|---|
| வாக்கெடுப்பு நடத்தப்படும் காலப்பகுதியில் உரிய நகரத்தில் தங்கியிருக்காமை அல்லது ஏதேனும் உடல் ரீதியான ஏலாமை / மத நம்பிக்கை காரணமாக வாக்களிக்கச் செல்வதில் சிரமம் உள்ளவர்கள் | மசச்சூசெட்ஸ்ஸின் சகல பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களும் தங்கள் வாக்கினை தாம் பதிவுசெய்தள்ள நகரில் அளிக்க வேண்டும்.<br><br>தனிப்பட்ட முறையில் வாக்கினை அளிக்கும்போது விண்ணப்பம் அவசியமற்றது. |
| ஒரே வீட்டில் வசிக்கும் அங்கத்தவர் ஒருவருக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் சார்பாக, தேர்தல் தினத்தன்று சமுகம் தரமுடியாத ஆட்களுக்காக வழங்கப்படுகின்றன வாக்களிப்பதற்கான உரித்தினை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தல்.<br><br>தேர்தல் தினத்தன்று சமுகம் தரமுடியாத ஆட்களுக்காக வழங்கப்படுகின்ற வாக்களிப்பதற்கான உரித்து சம்பந்தப்பட்டவரின் கோரிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும். ஒரு விண்ணப்பம் அல்லது கடிதம் மூலம் அதைக் கோரலாம். கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டதும் வாக்குச் சீட்டு தபால்மூலம் அனுப்பி வைக்கப்படும். | வாக்குச் சீட்டை முன்கூட்டியே தபால் மூலம் பெற்றுக் கொள்வதற்கான எழுத்து மூலமான கோரிக்கையை வாக்களர் மட்டுமே முன்வைக்க வேண்டும்.<br><br>முன்கூட்டிய வாக்களிப்பு காலப்பகுதிக்கு முன்னதாக முன்கூட்டிய வாக்குச்சீட்டுக்கான கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.<br><br>தயவுசெய்து உங்களுக்குரிய முன்கூட்டிய வாக்குப்பதிவுக்கான கோரிக்கையை நீங்களே முன்வைக்க வேண்டும். முன்கூட்டிய வாக்குப் பதிவுக்கான காலம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் வாக்குச்சீட்டுகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். |
| நகரிலிருந்து வெளியேறும் முன்னர் அலுவலகத்தில் தமது வாக்கினை அளிக்க முடியும். | குறுகிய காலப்பகுதியில் வாக்களிக்கலாம். |

# தபால் வாக்களிப்பு - இலங்கையின் சூல்நிலைமையில்

## ஆதி காலத்திலிருந்து இலங்கையில் பயன்பாட்டிலுள்ள தபால் வாக்களிப்பு செயல்முறை

அனேகமான நாடுகளில் நடைமுறையில் இருந்தவாறு, தேர்தல் செயற்பாட்டில் அவசியமாக கருதப்படுகின்ற குறைந்தபட்ச பிரதிநிதித்துவத்தை கொண்ட மக்களுக்கு வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்காக இலங்கையில் தபால் வாக்களிப்பு செயல்முறை ஆரம்பிக்கப்படவில்லை. தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தமது வாக்கினை அளிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதே அதன் நோக்கம். தேர்தல் எனப்படுவது பல தரப்பினர் ஒன்றிணைந்த ஒரு பாரிய மனித நடவடிக்கையாகும். அந்த நடவடிக்கையில் முன் நின்றுச் செய்யப்படும் தேர்தல் மற்றும் ஏனைய பாதுகாப்பு துறைகளைச் சார்ந்த உத்தியோகத்தர்கள் நாட்டில் நடத்தப்படும் எல்லா தேர்தல்களின்போதும் இந்த வாய்ப்பினைப் பெறுகின்றனர். பொதுவாக மூன்று துறைகளைச் சார்ந்தவர்களுக்கு இந்த உரித்து கிடைக்கின்றது. அதாவது, தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படும் சாத்தியம் உள்ளதெனக் கருதப்படும் அரசு உத்தியோகத்தர்கள், அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் அதிகாரிகளும் பணியாளர்களும் அத்துடன் படையினர், பொலிசார், சிவில் பாதுகாப்பு படையணியைச் சேர்ந்த நாட்டின் எல்லா பாகங்களிலும் கடமை புரியும் நபர்கள்.

அதன்படி, எனக்கு நாட்டில் தபால் வாக்கெடுப்புடன் சம்பந்தப்பட்ட 05 வகையான தேர்தல் சட்டங்கள் இருப்பதைக் காணலாம்.

- 1981 ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டம்
- 1981 ஆண்டின் 7ஆம் இலக்க மக்கள் தீர்ப்புச் சட்டம்
- 1981 ஆண்டின் 15ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்
- 1987 ஆண்டின் 02ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்
- உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் சட்டம் (262ஆம் அத்தியாயம்(

இந்த உரித்தினை பெறுபவர்கள் பற்றிய விபரம் 1981 ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித தேர்தல் சட்டத்தில் தரப்பட்டுள்ளது.

i. இலங்கைக் தரைப்படையின் உறுப்பினர் ஒருவர்

ii. இலங்கைக் கடற்படையின் உறுப்பினர் ஒருவர்

iii, இலங்கை விமானப் படையில் உறுப்பினர் வருவார்

iv. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் அல்லது சேவையாளர்

v. பொலிசுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் அல்லது சேவையாளர்

vi. இலங்கை அரசாங்க புகையிரத திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அல்லது சேவையாளர்

vii. தபால் திணைக்களத்தின் உத்தியோகத்தர் அல்லது சேவையாளர்

viii. தொலைத்தொடர்புகள் சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அல்லது சேவையாளர்

ix. இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் உத்தியோகத்தர் அல்லது சேவையாளர்

x. பிராந்திய போக்குவரத்துச் சபையின் உத்தியோகத்தர் அல்லது செயலாளர்

xi. தமது தொழிலுடன் சம்பந்தப்பட்ட காரணங்களால் தனிப்பட்ட முறையில் தமக்கென ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க முடியாது அல்லது அதற்கான சாத்தியம் உள்ளவர்கள்.

xii. அரச பணி அல்லது இலங்கை மத்திய வங்கி அல்லது இலங்கை உள்ளூராட்சி சேவையில் உள்ள பிற உத்தியோகத்தர் அல்லது சேவையாளர் வாக்கெடுப்பு அடக்கப்படும் திகதியன்று கடமைகளில் ஈடுபடும் சாத்தியம் உள்ளவர்கள்.
தனது வேட்பாளர் நிலை ஒதுக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாத வேட்பாளர் (வாசகம் 23/ (2))

மேலே குறிப்பிட்டுள்ள எந்தவொரு சேவையிலுள்ள அரசு ஊழியர் ஒருவருக்கு தபால் மூலம் வாக்களிக்கும் உரித்து இயல்பாகவே கிடைக்கின்றது. ஒருவர் தேர்தல் கடமைகளில் ஈடுபடாதிருந்தால் தனிப்பட்ட முறையில் தனக்குரிய வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்கலாம். எனினும், சட்டத்தின் பிரகாரம் தேர்தல் அறிவிப்பொன்று வெளியானதன் பின்னர் 06 நாட்களுக்குள் அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர் ஒருவர் மூலமாக தனது தேவையை உறுதிப்படுத்தி சம்பந்தப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அதனை தெரியப்படுத்த வேண்டும். இங்கு முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் யாதெனில், தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்கும் ஒருவர் அல்லது தபால்மூலம் வாக்களித்த ஒருவர் வேறொறு ஒரு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

தபால் மூலம் வாக்களிக்க உரித்து பெற்றவர்களை கவனத்தில் கொள்ளும்போது, அது மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையில் சிறு தொகையாகவே உள்ளது.

- இறுதியாக நடத்தப்பட்ட பாராளுமன்ற தேர்தலில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை -16,436,056 - 2020 ஆண்டு
- தபால் மூலம் வாக்களிக்க சமர்ப்பித்திருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 756,594
- அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 705,505
- நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எண்ணிக்கை - 51,089

அந்த வகையில் வட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையானது மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் 7.42% ஆகும்.

இலங்கையில் அதிகப்படியாக தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பம் செய்பவர்கள் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். அந்த எண்ணிக்கை சுமார் 74,565. அதைத்தொடர்ந்து அனுராதபுரம் மாவட்டம் - 56,458, கம்பஹா மாவட்டம் - 54,098, கண்டி மாவட்டம் - 54,052 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளன. தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பம் செய்பவர்கள் குறைந்த எண்ணிக்கையில் உள்ள மாவட்டமாக முல்லைத்தீவு காணப்படுகிறது. அது 3.381.(2020 ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் பற்றிய தேர்தல் ஆணைக்குழுவின் அறிவிக்கையிலிருந்து பெறப்பட்டது)

தபால் வாக்காளர் ஒருவர் பூர்த்தி செய்யவும் தகைமைகள் பற்றி சட்டத்தில் மிகவும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. இதன் நோக்கம் தேர்தல் தினத்தன்று கடமைகளில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு மாற்று சந்தர்ப்பத்தை வழங்குவதாகும். ஆகவே, அது, நேரடியாக முன்கூட்டியே வாக்களிக்கும் ஒரு முறையா இல்லாவிட்டால் வேறு வழிமுறையா என்பதற்கான சந்தேகங்களும் உள்ளன. அந்த வகையில் இது ஒருவர் தனிப்பட்ட முறையில் தனது பங்களிப்பை வெளிப்படுத்த வேண்டியதான தொலைவிலிருந்து வாக்களிக்கும் முறையாகும். எனவே, இதனை ஒரு கலப்பு முறையென புரிந்து கொள்ளலாம். வாக்காளருக்கு எந்த அழுத்தத்திற்கும் உட்படாமல் வாக்கினை அளிப்பதற்கு கிடைக்கும் வாய்ப்பு இந்த முறையிலுள்ள நன்மையை எடுத்துக் காட்டுகிறது. தெரிவத்தாட்சி அலுவலரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் முன்னிலையில் ஏற்கனவே சொல்லப்பட்ட தபால் வாக்களிப்பு நிலையத்தில் வாக்கினை அளிக்கும்போது ஒப்பீட்டு ரீதியாக ஆகக்குறைந்த இடையூறுகளே காணப்படும். நாம் அறிந்த வகையில் எமது நாட்டில் பின்பற்றப்படும் தபால் மூல வாக்களிப்பு முறை மிகவும் ஆரோக்கியமானது.

இதன் ஒட்டுமொத்த செயற்பாடு மிகுந்த கட்டுப்பாடுகள் கொண்டது. உரிய விண்ணப்ப படிவம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒன்றாக இருப்பதோடு, சம்பந்தப்பட்ட அரசு நிறுவனத்திற்கு அது பதுகாக்கப்பட்ட தபால் மூலம் விண்ணப்பம் செய்த அனைவருக்கும் ஒரே நேரத்தில் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்படும். அதேபோல் தபால் வாக்கு எண்ணும் பணிகளுக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. வாக்கெண்ணும் நடவடிக்கையில் முதல் கட்டமாக தபால் வாக்குகள் எண்ணப்படுவதோடு அதை அவதானிப்பதற்கு அரசியல் கட்சிகள் / வேட்பாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் தபால் வாக்கு முடிவுகளை அறிவித்தல் முக்கிய கட்டமாக பார்க்கப்படும். நாட்டிலுள்ள வாக்காளர்கள் மத்தியில் தபால் வாக்கு முடிவுகளின்படி உச்சத்தில் இருக்கும் அரசியல் கட்சி அல்லது குழு தேர்தலில் வெற்றி பெறும் என்ற கருத்து வேரூன்றி இருப்பதே அதற்குக் காரணம். இது ஓர் ஆய்வு முடிவாக இல்லாவிட்டாலும், தபால் வாக்குகள் கொண்டுள்ள பெறுமதி பற்றிய ஒரு கணிப்பாக உள்ளது.

இலங்கையில் நாம் அறிந்த தபால் வாக்களிப்பு செயல்முறையானது, பிற உலக நாடுகளில் உள்ளதுபோல் தேர்தல் தினத்தன்று வாக்களிக்க தவறும் நபர்களுக்கான (Absentee Voting Process) பாணியிலான ஒன்றல்ல என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். உலக அளவில் நடைமுறையில் உள்ள தபால் வாக்களிப்பு செயல்பாட்டை ஆராயும்போது, அனேகமாக தனிப்பட்ட முகவரி ஊடாக

பெற்றுக்கொள்ளும் விண்ணப்பத்தை பயன்படுத்தி தனிப்பட்ட முறையில் தபால் மூலம் வாக்களிக்க தகுதி உள்ளவர்களுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்படுவதைக் காணலாம்.

இதற்காக ஒதுக்கப்படும் காலப்பகுதி மிகவும் முக்கியமானது. பொதுவாக விண்ணப்பிப்பதற்கு குறுசிய ஒரு காலப்பகுதி வழங்கப்பட்டாலும் அந்தக் காலப்பகுதியில் உரிய பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி, சரியான விழிப்புணர்வுடன் இந்தப் பணியை முடிவுக்குக் கொண்டு வருதல் சவாலான ஒன்றாகவே கருதப்படுகிறது. உதாரணமாக எமது நாட்டில் பாராளுமன்றத் தேர்தல் மற்றும் சனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிப்பதற்கு 07 தொடக்கம் 10 நாட்கள் வழங்கப்படும். பொதுவாக உலக நாடுகள் முன்கூட்டிய வாக்களிப்புக்கு 15 நாட்கள் வரையான காலத்தை வழங்குகின்றன.

## இடரான ஒரு நிலைமையில் தபால் மூலம் வாக்களித்தல்.

இலங்கையில் இறுதியாக நடத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் உண்மையாகவே தீவிரமான ஓர் இடர் நிலைமையில் நடத்தப்பட்ட சவால் மிகுந்த தேர்தல் ஆகும். *கோவிட்-19* பெருந்தொற்று காரணமாக தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டதால் இந்தத் தேர்தல் பெரும்பாலானவர்களின் கவனத்தைப் பெற்றது. இதே நிலை தபால் வாக்களிப்பு செயற்பாடுகளிலும் அவதானிக்கப்பட்டது. 2020 பாராளுமன்ற தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிப்பதற்கு 2020 மார்ச் 06 திகதி தொடக்கம் மாரச் 16 திகதி நள்ளிரவு 12 மணி வரையான காலம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், திடீர் *கோவிட்-19* நோய்ப் பரவலினாலான தடைகளால் அந்தக் காலப்பகுதி நீட்டிக்கப்பட்டது. அவ்வாறு தடவைகள் கால நீட்டிப்பை வழங்குவதற்கு நாட்டில் விதிக்கப்பட்டிருந்த பயணத் தடைகளும் லீவு நாட்கள் பற்றிய அறிவிப்பும் காரணமாகின. இந்த நிலை மிகவும் சாதகமான ஒரு நகர்வுக்கு வழிவகுத்தது. அதாவது, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 26 (2) வாசகத்தின் படி சுகாதாரப் பணியாளர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது. இது இலங்கையின் தேர்தல் வரலாற்றில் இடம்பெற்ற அபூர்வமான ஒரு நிகழ்வாகும். இதன் மூலம் தேர்தல் சட்டத்தில் குறிப்பாக சொல்லப்பட்டுள்ள தரப்பினர் தவிர்ந்த ஒரு தரப்பை இனம்கண்டு தபால் மூலம் வாக்களிக்க வாய்ப்பு அளிக்கப்பட்டது.


[1]

[1] https://runews.lk/news/item/8248-official-postal-votes-to-post-offices

## ஒரு தபால் வாக்காளராக கணிக்கப்படுவதற்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள்.

எமது நாட்டின் தேர்தல் செயல்பாட்டில் வாக்குகள் நிராகரிக்கப்படுதல் பேசப்படும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் உலக அளவில் இந்த நிலை எதிர்மாறானது. அதாவது உலக அளவில் அளிக்கப்படாத வாக்குகளின் எண்ணிக்கையும், பழுதடைந்த வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கையும் மிகக் குறைவு என்றே கூறலாம். ஆனால் இலங்கையில் 1947 ஆண்டு நடத்தப்பட்ட முதலாவது தேர்தல் தொடக்கம் இதுவரை அளிக்கப்பட்ட வாக்குகளில் எண்ணிக்கை உயர்ந்த எண்ணிக்கையில் இருந்துள்ளதை கீழுள்ள அட்டவணை மூலம் தெரிந்துகொள்ளலாம்.

மேலும், இந்த ஆய்வில் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் பற்றியும் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அன்று தொடக்கம் இன்றுவரை நடத்தப்பட்டு தேர்தல் ஒவ்வொன்றிலும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருப்பதோடு கடந்த ஒரு தசாப்த காலத்தில் அவ்வாறு நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

**இலங்கையின் பாராளுமன்றத் தேர்தல் வரலாறு 1947 - 2020**

| தேர்தல் | பதிவுபெற்ற வாக்காளர் எண்ணிக்கை | அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | செல்லுபடியாகும் வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| *தனி ஆள், பல் உறுப்பினர் வட்டார முறைக்கு அமைய* | | | | | |
| 1947 | 3,048,145 | 1,710,150 | 56.10% | 44,570 | 2.61% |
| 1952 | 2,990,912 | 2,114,615 | 70.70% | 37,552 | 1.78% |
| 1956 | 3,464,159 | 2,391,538 | 69.04% | 30,683 | 1.28% |
| 1960 (March) | 3,724,507 | 3,041,420 | 81.66% | 32,040 | 1.05% |
| 1960 (July) | 3,724,507 | 3,076,869 | 82.61% | 22,225 | 0.72% |
| 1965 | 4710887 | 3,821,918 | 81.13% | 33,234 | 0.87% |
| 1970 | 5,505,028 | 4,991,798 | 90.68% | 25,828 | 0.52% |
| 1977 | 6,667,589 | 6,243,573 | 93.64% | 32,989 | 0.53% |
| *விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்கு அமைய* | | | | | |
| 1989 | 9,374,164 | 5962031 | 63.60% | 365,563 | 6.13% |
| 1994 | 10,945,065 | 8,344,095 | 76.24% | 400,389 | 4.80% |
| 2000 | 12,071,062 | 9,128,823 | 75.63% | 481,155 | 5.27% |
| 2001 | 12,428,762 | 9,449,813 | 76.03% | 493,944 | 5.23% |
| 2004 | 12,899,139 | 9,797,680 | 75.96% | 534,948 | 5.46% |
| 2010 | 14,088,500 | 8,630,689 | 61.26% | 596,972 | 6.92% |
| 2015 | 15,044,490 | 11,684,098 | 77.66% | 517,123 | 4.43% |
| 2020 | 16,263,885 | 12,343,392 | 75.89% | 744,373 | 6.03% |

(மூலம் : இலங்கை தேர்தல் ஆணைக்குழு)

## தபால் வாக்கு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுதல்

பல காரணங்களால் தபால் வாக்கு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். இது பெரும்பாலும் சட்ட வரம்பு மற்றும் தேர்தல் நடவடிக்கை முறைசார்ந்த விடயங்களுக்கு உட்பட்டதாக இடம் பெறுவதோடு, சாதாரண ஒரு வாக்கு நிராகரிக்கப்படுவதை விட தபால் வாக்கு நிராகரிக்கப்படுவதில் அதிக கவனம் செலுத்தப்படுவதற்கு சில காரணங்கள் உள்ளன.

தபால் வாக்காளர்களாக விண்ணப்பிப்பவர்கள் அரசு அதிகாரிகள் / உத்தியோகத்தர்களாக இருப்பதால் அதனை மிகவும் நுட்பமாக செய்யவேண்டுமென எதிர்ப்பார்க்கப்படும். விண்ணப்பிக்கும்போது பிழைகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவானது. ஏனென்றால், ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் அதைச்செய்ய வேண்டும். அதேபோல், அது நேரடி உயரதிகாரியின் கண்காணிப்புக்கும் உட்படுகிறது.

தபால் வாக்கு ஒன்றுக்காக செலவிடும் தொகை அதிகம் என்பதால் ஒட்டுமொத்தமாக அதற்கு ஏற்படும் செலவினை வரையறுப்பது கடினம். மேலும், தேர்தல் ஆணைக்குழு தவிர்ந்த பிற வெளி நிறுவனம் ஒன்றையும் இப்பணியில் இணைத்துக்கொள்ள வேண்டும். அடுத்து நடத்தப்படவுள்ள தேர்தலுக்கான செலவு இரு மடங்காக அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது. நாட்டில் நிலவும் பணவீக்கம் மற்றும் பிற எல்லா நிறுவனங்களிலும் காணக் கிடைக்கும் அசாதாரண பராமரிப்ச் செலவு இதற்கு காரணமா அமைந்துள்ளது.

**ஒரு விண்ணப்பம் பின்வரும் காரணங்களால் நிராகரிக்கப்படலாம்.**

- நிருவாக மாவட்டத்தை தவறாக குறிப்பிடுதல்.
- தபால் வாக்கினை கோருவதற்கான உரித்து இல்லாதபோது.
- விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் வாக்காளர் இடாப்பிலுள்ள தகவல்களுடன் இணங்காமை.
- தனக்குரிய தொடர் இலக்கத்தை விண்ணப்பத்தில் சரியாக குறிப்பிட தவறுதல்.
- விண்ணப்பிக்கும் நபர் விண்ணப்பத்தில் கையொப்பத்தை இடத் தவறுதல்.
- அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரால் உறுதி செய்யப்படாத விண்ணப்பங்கள்.
- தெரிவத்தாட்சி அலுவலருக்கு தாமதமாக கிடைத்தல்
- தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்த வேண்டிய அவசியம் இல்லாத நபர்களின் விண்ணப்பங்கள்.

## தபால் வாக்களிக்க விண்ணப்பிக்கும்போது அறிய வேண்டிய சில விடயங்கன் பற்றிய தெளிவுப்படுத்தல்

தபால் மூலம் வாக்களித்தல் பற்றி உரையாடும்போது முக்கியமான சில பதங்களுக்கு உரிய பொருளை அறிந்து வைத்திருக்க வேண்டும். இவை தேர்தல் பணிகளுடன் நெருக்கமான தொடர்பினை கொண்டுள்ளவர்களுக்கு நன்கு பரிச்சயமானவையாக உள்ளபோதிலும், ஏனையவர்கள் ஒரே தடவையில் புரிந்துகொள்வது கடினம். அந்த வகையில் நாம் அறிந்திருக்க வேண்டிய சில பதங்களும் அதற்கா விண்ணப்பங்கள விளங்கங்களும்

**தேர்தல் மாவட்டம்**

இலங்கையில் 22 தேர்தல் மாவட்டங்கள் உள்ளன. 01 இலக்க தேர்தல் மாவட்டமாக கொழும்பும் 22 இலக்க தேர்தல் மாவட்டமாக கேகாலையும் காணப்படுகிறது. ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் நிருவாக மாவட்டத்தின் பெயரில் அழைக்கப்படுவதோடு வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய 03 நிருவாக மாவட்டங்களுக்குமான தேர்தல் மாவட்டமாக 11 இலக்கம் கொண்ட வன்னி தேர்தல் மாவட்டம் காணப்படுகிறது. மேலும், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய நிருவாக மாவட்டங்களுக்கான

தேர்தல் மாவட்டமாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டமும், அம்பாறை நிருவாக மாவட்டம் 13 இலக்க திகாமடுல்ல தேர்தல் மாவட்டமாகவும் உள்ளது.

**நிருவாக மாவட்டம்**

இலங்கைத் தீவானது நிருவாக நடவடிக்கைகளின் வசதி கருதி 09 மாகாணங்களாகவும், 25 நிருவாக மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் முதலாவது அட்டவணையில் 25 நிருவாக மாவட்டங்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள நிருவாக மாவட்டங்களில் எல்லைகளை மாற்ற அல்லது புதிய நிருவாக மாவட்டங்களை உருவாக்க வேண்டிய அவசியம் காணப்படின் பாராளுமன்றத்தில் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். நிருவாக மாவட்டம் ஒவ்வொன்றிலும் நியமிக்கப்பட்டுள்ள தலைமை உத்தியோகத்தர் மாவட்டச் செயலாளர் என அழைக்கப்படுவார். மாவட்டத்தின் நிருவாக கடமைகளை கொண்டு நடத்தும் இவர் தொடக்க காலத்தில் அரசாங்கத்தின் முகவர் என் அறியப்பட்டிருந்தார்.

**வாக்கெடுப்பு பிரிவு (தேர்தல் தொகுதி)**

இலங்கையில் 160 வாக்கெடுப்பு பிரிவுகள் உள்ளன. இவை எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் முடிவுகளின்படி பிரிக்கப்பட்டுள்ளன. இப்பிரிவுகள் தேர்தல் தொகுதிகள் என்றும் அழைக்கப்படுவதுண்டு. உதாரணம் - மத்திய கொழும்பு, தெவிநுவர, கல்முனை

**வாக்கெடுப்பு மாவட்டம்**

வாக்களிப்பு நிலையமொன்றில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளவர்கள் வசிக்கும் பிரதேசம் வாக்கெடுப்பு மாவட்டம் என அழைக்கப்படுகிறது. வாக்கெடுப்பு பிரிவில் ஒன்றுக்கும் மேற்பட்ட வாக்கெடுப்பு மாவட்டங்கள் இருப்பதுடன் அவற்றுக்கான இலக்கங்கள் 01இல் தொடங்கி ஒழுங்கின்படி வழங்கப்பட்டிருக்கும். வாக்கெடுப்பு மாவட்டத்தின்படி வாக்காளர் இடாப்பினை தனியாக பிரித்துக்கொள்ள முடியும். இலங்கையில் 12021 வாக்கெடுப்பு பிரிவுகள் காணப்படுகின்றன.

**தொடர் இலக்கம்**

ஒருவரின் பெயர் உள்ளடக்கப்பட்ட, உரிய ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ள வாக்காளர் இடாப்பில் குறிப்பிட்டுள்ள இலக்கம் தொடர் இலக்கம் எனப்படும். இது பெயருக்கு நேராக எழுதப்பட்டிருக்கும். இந்த இலக்கம் ஆளுக்கு ஆள் வேறுபட்டிருக்கும். இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட தேர்தல்களுக்காக ஒரே வாக்காளர் இடாப்பு பயன்படுத்தப்படும்போது தொடர் இலக்கம் மாறாது.

## தபால் வாக்கு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுதல் - நுட்பம் மற்றும் நடவடிக்கை முறை சார்ந்த சவால்கள்

முந்திய அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல தபால் வாக்கு நிராகரிக்கப்படுதல் பேசப்படுவதற்கான ஒரு விடயமாக மாறிருப்பதன் காரணம், அது சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரியின் அடிப்படை வாக்குரிமையை சவாலுக்கு உட்படுத்துவதால் அல்ல. தபால் வாக்களிக்கும் செயல்முறை 02 வாரங்களுக்கும் குறையாத காலப்பகுதியில் நடைபெறுவதால் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகள் தமக்கு அந்த உரித்து உண்டா இல்லையா என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்வர். தேர்தல் ஆணைக்குழு மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் ஊடாக சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரி அறிவுறுத்துவதால் அவர்களுக்கு, தங்களாலான வழு (பிழை) அல்லது தவறுதல்களை அறியும் வாய்ப்பும் கிடைக்கின்றது.

பொதுவாக தபால் வாக்கு விண்ணப்பம் நிராகரிக்கப்படுதல் என்ற தலைப்பில், உரிய தேர்தல் மற்றும் தேர்தல் நடத்தப்பட்ட ஆண்டைக் குறிப்பிட்டு தேர்தல் அலுவலகத்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட வாக்காளருக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்படும். அதில் தபால் வாக்குக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதில் தாக்கம் செலுத்தும் குறைந்தபட்சம் 15 வகையான வழுக்கள் (பிழைகள்)

பட்டியலிடப்பட்டு விண்ணப்பதாரிக்குரிய தவறு சுட்டிக்காட்டப்படும். அதில் பிற எனத் தெரிவிக்கும் பகுதியில் 14 வகையான தவறுகளுக்குள் அடங்காத விடயம் தெரிவிக்கப்படும். தேர்தல் அலுவலகத்திற்கு அதனை தெரியப்படுத்தவும் கடப்பாடு உண்டு.


ஒரு தபால் வாக்காளராக கணிக்கப்படுவதற்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படினும், தேர்தல் ஆணைக்குழு விரும்பினால் சம்பந்தப்பட்ட நபரை தேர்தல் கடமையில் ஈடுபத்தலாம். எனினும், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பத்தை திருத்தி மீண்டும் அனுப்பி வைப்பதற்கான வாய்ப்பு இல்லாமையும் காணப்படும் ஒரு குறைபாடாகும். குறுகிய ஒரு காலப்பகுதியில் வேகமாக தேர்தல் பிரசார நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டியுள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

விண்ணப்பத்தை திருத்தம் செய்து மீண்டும் சமர்ப்பிக்க வாய்ப்பு வழங்கப்படுமானால் 90% அல்லது அதிலும் கூடிய விண்ணப்பங்களை முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களாக கருதப்பட வாய்ப்புள்ளது. உதாரணமாக, தொடர் இலக்கத்தையும் வாக்கெடுப்பு மாவட்டத்தையும் சரியாக குறிப்பிடத் தவறியுள்ளதால் பெரும்பாலான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதுமாத்திரமின்றி, விண்ணப்பதாரி அல்லது அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் கையொப்பத்தை வைக்கத் தவறிய பிழைகளும் காணப்படுகின்றன. இவற்றை வேண்டுமென்றே செய்யப்பட்ட தவறுகளாக கருத முடியாது. இந்தத் தவறுகளை குறுகிய ஒரு காலப்பகுதியில் நிவர்த்தி செய்து மீண்டும் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கலாம்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதுபோல இச்செயல்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ள கால எல்லை குறுகியதாக இருப்பதால் இடம்பெறும் தவறுதல்களை சரிசெய்வது குறித்து நுட்பமாக சிந்திக்க வேண்டியுள்ளது.

அனேகமாக எல்லா தேர்தல்களிலும் தபால் வாக்களிப்பதற்கான விண்ணபத்தில் தொடர் இலக்கம் முறையாக தெரிவிக்கப்படாததால் அதிகமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுண்டு. அதில் சில விடயங்கள் தாக்கம் செலுத்துகின்றன. அந்த இலக்கம் பற்றிய விழிப்புணர்வு இன்மை முக்கிய காரணியாக உள்ளது. ஆன்லைன் (online) மூலம் அதனை மிக எளிதாக சரிபார்த்துக் கொள்ளலாம். தங்களுடைய செல்லிட தொலைபேசியை பயன்படுத்தி தேர்தல் திணைக்களத்தின் இணைய தளத்திற்குள் பிரவேசித்து தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பதிவேற்றி மிகக்குறுகிய நேரத்தில் அவற்றை பரிசீலிக்கலாம். அதேபோன்று, சம்பந்தப்பட்ட தேர்தல் அலுவலகம் அல்லது கொழும்பு ராஜகிரியவில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தை தொடர்புகொண்டு தொடர் இலக்கத்தை அறிய முடியும்.

இறுதியாக நடத்தப்பட்ட தேர்தலின்போது பயன்படுத்தப்பட்ட வாக்காளர் இடாப்பிலுள்ள இலக்கத்தையே மீண்டும் குறிப்பிடுதல் மற்றுமொரு தவறாகும். முந்திய தேர்தலுக்காக பயன்படுத்தப்பட்ட வாக்காளர் இடாப்பு அதைத் தொடர்ந்து நடத்தப்படும் தேர்தலுக்காக பயன்படுத்தப்படும் பட்சத்தில் அந்த இலக்கம் சரியானது. அந்த வகைகள் அனேகமான தபால் வாக்காளர்கள் தம்மிடம் ஏற்கனவே உள்ள தொடர் இலக்கத்தை பதிவுசெய்து விண்ணபத்தை பூர்த்தி செய்யும் தவறினை செய்கின்றனர்.




---

[2] https://www.sundaytimes.lk/141221/news/almost-14-of-postal-vote-applications-rejected-128321.html

## தபால் வாக்கு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுதலுடன் சம்பந்தப்பட்ட ஆய்வுத் தகவல்களின் பகுப்பாய்வு

தபால் வாக்கு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுதலுடன் சம்பந்தப்பட்டதாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்காக தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்கள் பின்வருமாறு

- கண்டி
- அம்பாந்தோட்டை
- யாழ்ப்பாணம்
- கம்பஹா
- பதுளை
- நுவரெலியா
- குருநாகல்
- கேகாலை

மேலே குறிப்பிட்டுள்ள மாவட்டங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் கடந்த பாராளுமன்ற தேர்தலுக்குரிய (2020 ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடத்தப்பட்ட) தலா 20 விண்ணப்பங்கள் இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டன. மொத்தமாக நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எண்ணிக்கை 160. யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் தமிழ் மொழியில் இருந்தன. நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களிலிருந்து ஒரு மாவட்டத்தில் தலா 2 விண்ணப்பங்கள் வீதம் 4 விண்ணப்பங்கள் தமிழ் மொழி மூலம் கிடைத்திருந்தன. ஆகவே தமிழ்மொழி மூலம் கிடைத்திருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 24 ஆகும்.

குறிப்பாக, விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு கீழே தரப்பட்டுள்ள விடையங்கள் தாக்கம் செலுத்தியிருந்தன.

1). தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தாமை
2). தபால் மூலம் வாக்களிப்பதற்கான உரித்து இல்லாமை
3). கையொப்பமிட தவறியிருத்தல்
4). விண்ணப்பத்தில் பதவி குறிப்பிடப்படாமை
5). அத்தாச்சிப்படுத்தும் உத்தியோகத்தர் முறையாக உறுதிப்படுத்தாமை (கையொப்பம்/ பதவி முத்திரை இல்லாமல்)
6). தாமதம்.
7). உரிய ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் பதிவு பெறாமை
8). வாக்கெடுப்பு மாவட்டத்தின் இலக்கம் மற்றும் தொடர் இலக்கம் உட்பட அவசியமான தகவல்களை குறிப்பிடத் தவறிய பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள்.
9). ஏனைய

மேலே ஏனைய, எனக் குறிப்பிட்டுள்ள பகுதியில் கீழுள்ள தகவல்களைக் காண முடிந்தது. ஒரு சில வாக்காளர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தபோதும் வாக்கெடுப்பு நடத்தப்பட்ட திகதியன்று சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தனர். அதேபோல் மேலும் சிலர் ஓய்வுபெற்று செல்வதற்கு முன்னரான லீவில் இருந்தனர்.

மேலும், அனேகமான சந்தர்ப்பங்களில் விண்ணப்பித்த பின்னர் தேர்தல் / வாக்கெடுப்பிற்குரிய படிவத்தை தெரிவு செய்வதில் தவறு செய்திருந்தனர். தபால் மூலம் வாக்களிப்பதற்கான படிவத்தை சிரமம் ஏதுமின்றி பூர்த்திசெய்ய முடியும். இதில் விண்ணப்பதாரிக்கு மேலதிகமாக அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் தபால் வாக்களிப்பதற்கான விண்ணப்பம் குறைந்தபட்சம் இரண்டு நபர்களின் கண்காணிப்புக்கு உட்படுகிறது. விண்ணப்பத்தில் குறிப்பிட்ட ஒரு சில தகவல்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. எனவே தமக்குரிய விண்ணப்பத்தை சரியாக தெரிவுசெய்ய தவறுதல் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

இரண்டு விண்ணபங்களைச் சமர்ப்பித்தல் “ஏனைய“ என்ற தலைப்பின் கீழ் ஆராயப்பட்டுள்ள மற்றுமொரு விடயமாகும். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களில் அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்கள் இரண்டு பேரின் கையொப்பங்கள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவற்றில் தரப்பட்டிருந்த தகவல்கள் உண்மையாக இருந்தபோதும் எந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்வது என்பது சந்தேகத்திற்குரியது.

**அதன்படி, இறுதியாக கீழே தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.**

| மாவட்டமும் விண்ணப்பங்களில் எண்ணிக்கையும் | தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தாமை | தபால் வாக்களிப்பதற்கான உரித்து இல்லாத | விண்ணப்பதாரரின் கையொப்பம் இல்லாத | விண்ணப்பதாரியின் பதவி குறிப்பிடப்படாத | அத்தாட்சிப் படுத்தும் அலுவலர் முறையாக உறுதிப்படுத்தாமை. (கையொப்பம் / பதவி முத்திரை பொறிக்கப்பட்ட மை) விண்ணப்பம் தாமதமாக அனுப்பப்பட்டிருத்தல். | உரிய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட வாக்காளர் இடாப்பில் பதிவு பெறாத | வாக்கெடுப்பு மாவட்டத்தின் இலக்கம் மற்றும் தொடர் இலக்கம் உட்பட அவசியமான தகவல்களை குறிப்பிடத் தவறிய | ஏனைய |
|---|---|---|---|---|---|---|---|---|
| கம்பஹா - 20 | 01 | 01 | 02 | 01 | 04 | 01 | 10 | |
| யாழ்ப்பாணம் - 20 | 01 | 01 | 02 | 01 | 02 | 05 | 08 | |
| கண்டி - 20 | 01 | 01 | 02 | 02 | 02 | 02 | 09 | 01 |
| அம்பாந்தோட்டை - 20 | 03 | | 02 | 01 | 02 | 01 | 11 | |
| நுவரெலியா - 20 | 03 | 01 | 03 | 03 | 04 | | 06 | |
| கேகாலை - 20 | | | 01 | 03 | 03 | 02 | 09 | 02 |
| குருநாகல் - 20 | 02 | 02 | 02 | 02 | 04 | 02 | 02 | 04 |
| பதுளை - 20 | 01 | 01 | 02 | 01 | | | 15 | |
| **மொத்தம் - 160** | **12** | **07** | **16** | **14** | **21** | **13** | **70** | **07** |

**மூலம் : இலங்கை தேர்தல் ஆணைக்குழு**

## மாவட்டம் ஒவ்வொன்றிலும் அளிக்கப்படாத தபால் வாக்குகளின் எண்ணிக்கை

இலங்கையில் நடத்தப்படும் தேர்தல் ஒவ்வொன்றிலும் அளிக்கப்படாத தபால் வாக்குச் சீட்டுகள் இருப்பதைக் காணலாம். அது எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருப்பினும், வாக்கினை பதிவு செய்யாமைக்கான காரணத்தை கண்டறிவது காலத்தின் தேவையாக உள்ளது. அந்தவகையில் கடந்த பாராளுமன்ற தேர்தலுடன் சம்பந்தப்பட்ட புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### மாவட்டம் ஒவ்வொன்றிலும் அளிக்கப்படாத தபால் வாக்குகளின் எண்ணிக்கை

| மாவட்டம் | வழங்கப்பட்ட தபால் வாக்குகளின் எண்ணிக்கை | அளிக்காத (குறியீடு இடப்படாத) வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை | அளிக்கப்படாது எஞ்சிய வாக்குச் சீட்டுகள் நூற்று வீதம் (%) |
|---|---|---|---|
| கொழும்பு | 36,530 | 1,156 | 3.16 |
| கம்பஹா | 54,098 | 1,572 | 4.3 |
| களுத்துறை | 37,777 | 1,078 | 1.99 |
| கண்டி | 54,052 | 1,402 | 3.71 |
| மாத்தளை | 21,977 | 528 | 0.98 |
| நுவரெலியா | 19,741 | 476 | 2.17 |
| காலி | 40,770 | 873 | 4.42 |
| மாத்தறை | 29,149 | 832 | 2.04 |
| அம்பாந்தோட்டை | 20,474 | 681 | 2.34 |
| யாழ்ப்பாணம் | 21,239 | 357 | 1.74 |
| கிளிநொச்சி | 3,590 | 53 | 0.25 |
| மன்னார் | 4,196 | 86 | 2.4 |
| வவுனியா | 5,132 | 103 | 2.45 |
| முல்லைத்தீவு | 3,381 | 33 | 0.64 |
| மட்டக்களப்பு | 12,815 | 173 | 5.12 |
| அம்பாறை | 28,668 | 681 | 5.31 |
| திருகோணமலை | 15,200 | 292 | 1.02 |
| குருநாகல் | 74,565 | 1,665 | 10.95 |
| புத்தளம் | 14,267 | 493 | 0.66 |
| அனுராதபுரம் | 56,458 | 1,353 | 9.48 |
| பொலனறுவை | 19,550 | 722 | 1.28 |
| பதுளை | 42,872 | 1,006 | 5.15 |
| மொணராகலை | 23,411 | 691 | 1.61 |
| இரத்தினபுரி | 31,638 | 1,024 | 4.37 |
| கேகாலை | 33,955 | 971 | 3.07 |
| **மொத்தம்** | **705,505** | **18,301** | **2.59** |

**மூலம் : இலங்கை தேர்தல் ஆணைக்குழு**

மேலுள்ள அட்டவணையின்படி தேர்தல் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட மொத்த தபால் வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை 705,505 ஆக இருப்பதோடு அளிக்கப்படாத வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கை 18,301 ஆகும். நூற்று வீத அடிப்படையில் அது 2.59. மேற்படி தபால் வாக்கு சீட்டுகள் 1,288 தபால் வாக்களிப்பு நிலையங்கள் மூலமாக விநியோகிக்கப்பட்டிருந்தன. தபால் வாக்காளர்கள் வாக்களிக்காது இருந்ததற்கு *கோவிட்-19* பெருந்தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு பின்பற்றிய பாதுகாப்பு வழிமுறைகள் காரணமாக அமைந்திருக்கக்கூடும். தேர்தலில் சுகாதார வழிமுறைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும், அது குறித்து ஆரம்பத்தில் அதீத கவனம் செலுத்திய வாக்காளர்கள் பிற்காலத்தில் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளல் போன்ற காரணங்கள் இதில் தாக்கத்தைச் செலுத்திருக்க வாய்ப்புள்ளது. முந்திய தேர்தல்களுடன் ஒப்பிடும்போது தபால் வாக்களிப்புக்கு வழங்கப்பட்டிருந்த ஒருவார காலப்பகுதி இறுதியாக நடத்தப்பட்ட தேர்தலில் 10 நாட்கள் வரை நீட்டிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தபால் வாக்கினை பதிவு செய்யத் தவறிய அனைத்து மேலுறைகளும் தெரிவத்தாட்சி அலுவலரின் அறிவுறுத்தலுக்கு அமைய மாவட்ட தேர்தல் அலுவலகம் ஊடாக மீளப் பெறப்பட்டு பாதுகாப்பாக வைத்திருத்தல் பொதுவான நடைமுறையாக இருந்து வருகிறது.

## தபால் வாக்குகள் நிராகரிக்கப்படுவதற்கான நுட்பம் சார்ந்த மற்றும் நடவடிக்கை முறையை ஆராய்தல்

தபால் வாக்குகள் நிராகரிக்கப்படுதலுடன் சம்பந்தப்பட்ட உலக நாடுகளின் நிலைமையை ஆராயும்போது அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டிய ஒரு விடயம் உள்ளது. அதாவது, பல்பரிமாண தொழில்நுட்பப் பயன்பாட்டுடன் ஒட்டுமொத்த தேர்தல் செயல்முறையை டிஜிட்டல் மயப்படுத்தியுள்ள நாடுகளில் இதுபோன்ற நுட்பம் சார்ந்த மற்றும் நடவடிக்கை முறையிலான பலவீனங்கள் மிகவும் குறைவாக காணப்படுகின்றன. எனினும், அதற்குச் சமாந்தரமாக தற்கால தொழில்நுட்ப விருத்தியானது மாறுபட்ட சில சவால்களை ஏற்படுத்தியிப்பதையும் மறுக்க முடியாது. உண்மையாகவே தேர்தல் செயல்பாடு என்பது புதிய பரீட்சித்தல்கள் மற்றும் போக்குகள் ஊடாக கவனத்துடன் கையாளவேண்டிய ஒரு நடைமுறைச் செயற்பாடாகும்.

## தபால் வாக்கு விண்ணப்பங்களை வகைப்படுத்தல்

| மாவட்டம் | கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | நிராகரிக்கப்பட்டதை வகைப்படுத்தல் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | கடமையில் ஈடுபடுத்தாத | தபால் வாக்கு உரித்து அற்ற | விண்ணப்பிப்பவரின் கையொப்பம் இல்லாத | முறையாக அத்தாட்சிப் படுத்தாத | தவறான தகவல் / பூரணப்படுத்தாத | தாமதித்து கிடைத்த |
| கொழும்பு | 38,207 | 36,530 | 1,677 | 305 | 132 | 100 | 172 | 516 | 452 |
| கம்பஹா | 55,802 | 54,098 | 1,704 | 3 | 31 | 197 | 205 | 793 | 475 |
| களுத்துறை | 39,807 | 37,777 | 2,030 | 673 | 97 | 111 | 367 | 522 | 260 |
| கண்டி | 64,488 | 54,052 | 10,436 | 2,811 | 442 | 311 | 338 | 6,464 | 70 |
| மாத்தளை | 23,076 | 21,977 | 1,099 | 301 | 15 | 35 | 93 | 633 | 22 |
| நுவரெலியா | 20,979 | 19,741 | 1,238 | 123 | 67 | 30 | 83 | 929 | 6 |
| காலி | 43,610 | 40,770 | 2,840 | 410 | 149 | 124 | 247 | 1,745 | 165 |
| மாத்தறை | 30,682 | 29,149 | 1,533 | 435 | 110 | 122 | 193 | 570 | 103 |
| அம்பாந்தோட்டை | 23,607 | 20,474 | 3,133 | 259 | 18 | 92 | 161 | 1,960 | 643 |
| யாழ்ப்பாணம் | 21,623 | 21,239 | 384 | 6 | 165 | 24 | 32 | 144 | 13 |
| கிளிநொச்சி | 4,259 | 4,196 | 63 | - | - | - | 2 | 61 | - |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மன்னார்** | 5,371 | 5,132 | 239 | 37 | 40 | 18 | 6 | 71 | 67 |
| **வவுனியா** | 3,508 | 3,381 | 127 | 11 | 2 | 2 | 22 | 90 | - |
| **முல்லைத்தீவு** | 3,650 | 3,590 | 60 | - | - | 2 | 7 | 50 | 1 |
| **மட்டக்களப்பு** | 13,201 | 12,815 | 386 | - | 131 | 14 | 55 | 131 | 55 |
| **அம்பாறை** | 30,618 | 28,668 | 1,950 | 370 | 136 | 139 | 201 | 967 | 137 |
| **திருகோணமலை** | 15,630 | 15,200 | 430 | 60 | 94 | 6 | 32 | 206 | 32 |
| **குருநாகல்** | 77,192 | 74,565 | 2,627 | 332 | 255 | 197 | 194 | 1,405 | 244 |
| **புத்தளம்** | 15,332 | 14,267 | 1,065 | 358 | 18 | 44 | 42 | 557 | 46 |
| **அனுராதபுரம்** | 59,676 | 56,458 | 3,218 | 224 | 76 | 73 | 198 | 2,589 | 58 |
| **பொலனறுவை** | 21,965 | 19,550 | 2,415 | 230 | - | 94 | 124 | 1,846 | 121 |
| **பதுளை** | 46,671 | 42,872 | 3,799 | 297 | 170 | 190 | 367 | 2,701 | 74 |
| **மொணராகலை** | 26,019 | 23,411 | 2,608 | 562 | - | 111 | 81 | 1,749 | 105 |
| **இரத்தினபுரி** | 33,275 | 31,638 | 1,637 | 813 | 15 | 68 | 84 | 553 | 104 |
| **கேகாலை** | 38,346 | 33,955 | 4,391 | 536 | 2 | 222 | 140 | 3,312 | 179 |
| **மொத்தம்** | **756,594** | **705,505** | **51,089** | **9,156** | **2,165** | **2,326** | **3,446** | **30,564** | **3,432** |

**மூலம் : இலங்கை தேர்தல் திணைக்களம்**

**மேலுள்ள அட்டவணையை ஆராயும்போது சில விடயங்களை தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது.**

01. தபால் வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் அதிகளவில் நிராகரிக்கப்படுவதற்கு தொடர் இலக்கத்தை சரியாக குறிப்பிடாமை காரணமாக அமைந்துள்ளது. அதேபோல், வாக்கெடுப்பு மாவட்டத்தின் இலக்கம், தெருவின் பெயர் அல்லது கிராமத்தின் பெயர் தவறாக எழுதப்பட்ட சந்தர்ப்பங்களையும் காணலாம். இத்தகைய தகவல்களை நுணுக்கமாக சரிபார்ப்பதன் மூலம் ஏற்படக்கூடிய தவறுகளை திருத்திக்கொள்ள முடியும். உறுதிப்படுத்தப்பட்ட ஒரு தகவல் தேவைப்படும்போது அதை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பதை தெரிந்து வைத்திருத்தல் அவசியமாகும். அருகாமையில் உள்ள மாவட்டத் தேர்தல் அலுவலகம் மற்றும் கிராம உத்தியோகத்தர் அத்தகைய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சிறந்த மூலங்கலாகும். எனினும், மேலோட்டமாக பார்க்கும்போது பெரும்பாலான வாக்காளர்களுக்கு அந்த மூலங்களை அணுகுவதற்கான வாய்ப்பு இல்லையென்றே கூற வேண்டும்.

மேலும் தரவுகளை பார்க்கும்போது நிராகரிக்கப்பட்ட 51,089 விண்ணப்பங்களில் 30,564 விண்ணப்பங்கள் இப்படியான சிறு தவறுகளினால் (வழுக்கள்) நிராகரிக்கப்பட்டுள்ளன. தொடர் இலக்கம் / வாக்கெடுப்பு மாவட்டத்தின் இலக்கம் / தெரு அல்லது கிராம உத்தியோகத்தர் பிரிவை தவறாக குறிப்பிட்டுள்ளமை போன்ற காரணங்களால் பெரும்பாலான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. இவற்றை, தகவல்களை தவறாக குறிப்பிட்டுள்ள அல்லது பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களாக கருதலாம்.

02. அத்தாட்சிப்படுக்கும் உத்தியோகத்தர் முறையாகப் அத்தாட்சிப்படுத்தாமை: 21 விண்ணப்பங்கள் இது சம்பந்தப்பட்ட தவறுகளுடன் காணப்பட்டன. மாதிரியாக எடுத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 160 ஆகும். அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர் தனது கையொப்பத்தை இடத் தவறியிருந்தமை பாரதூரமான தவறாக அவதானிக்கப்பட்டது. பதவி முத்திரையைப் பொறிக்கத் தவறிய விண்ணப்பங்களும் காணப்பட்டன. ஒருசில விண்ணப்பங்களில் இந்த இரண்டு தவறுகளையும் காணமுடிந்தது. இதுபோன்ற தவறுகளால் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், மொத்தமாக நிராகரிக்கப்பட்டிருந்த 51,089 விண்ணப்பங்களில் 4,446 சதவீதமாகும்.

03. விண்ணப்பிக்கும் நபர் தனது கையொப்பத்தை வைக்கத் தவறியதால் ஏற்பட்ட பிழைகளையும் அவதானிக்க முடிந்தது. நாம் தெரிவு செய்த 160 மாதிரிகளில் 16 விண்ணப்பங்களில் இந்த நிலை காணப்பட்டது. இதுபோன்ற தவறுகளால் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், மொத்தமாக நிராகரிக்கப்பட்டிருந்த 51,089 விண்ணப்பங்களில் 2.326 சதவீதமாகும்.

04. தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தாமை மற்றும் தபால் மூலம் வாக்களிப்பதற்கான உரிப்பு இல்லாமை போன்ற காரணங்களினால் முறையே 9,158 மற்றும் 2,165 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. தேர்தல் திணைக்களம் அதனது தகவல்களை அடிப்படையாக வைத்து இந்த முடிவை எடுத்துள்ளது. விண்ணபத்தில் கோரப்பட்டுள்ளன சகல தகவல்களையும் முறையாக வழங்கியுள்ளபோதிலும் நமது பதவிப் பெயரை சரியாக குறிப்பிடத் தவறிய பலர் இருப்பதை அறியமுடிந்தமை வியப்பாக உள்ளது. நாம் மாதிரிகளாக எடுத்துக்கொண்ட 160 விண்ணப்பங்களில் அத்தகைய 14 விண்ணப்பங்கள் காணப்பட்டன. எனவே, நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களில் இந்தக் காரணத்தால் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் காணப்பட்டன.

## தபால் மூலம் வாக்களிக்க வராத அரச உத்தியோகத்தர்கள்

தபால் வாக்காளர் ஒருவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டாலும்கூட, தொடர்ச்சியாக விழிப்புடன் இருந்தால் மாவட்ட தேர்தல் அலுவலகம் ஊடாக அதனை சரிசெய்து கொள்ளமுடியும். விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதை விட தபால் வாக்கு நிராகரிக்கப்படுவது பற்றி அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும். தேர்தல் ஆணைக்குழுவானது நிராகரிக்கப்படுகின்ற வாக்குகள் சம்பந்தமாக தீவிர சாதக நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. அதாவது, வேட்பாளர்களை நிராகரிப்பவர்களாக வாக்காளர்களே இருக்க வேண்டுமென தேர்தல் ஆணைக்குழு கருதுகிறது.

எனினும், சட்டத்துக்கு அமைவாக அத்தகைய ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமானால் பாராளுமன்றத்தில் அதற்குரிய சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். பொதுவாக தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்கும் செயல்பாடு வேட்புமனு வழங்கப்படும்போது முடிவுக்கு வரும். தபால் வாக்களிக்க விண்ணப்பிக்கும்போது அதிகாரபூர்வமாக எந்தவொரு வேட்பாளர் பற்றியும் அறிய வாய்ப்பின்மை அதற்கான காரணமாக அமையலாம். எனினும், உரிய செயற்பாட்டுக்காக வழங்கப்படுகின்ற 10 நாட்கள் கொண்ட காலப்பகுதியில் விண்ணப்பதாரி ஒருவருக்கு விண்ணப்பத்தில் உள்ள குறைபாட்டை நிவர்த்திசெய்துகொள்வதற்கு உள்ள வாய்ப்பு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது.

எனினும், தபால் வாக்குக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படும்போது அதற்கான ஒரு மாற்றுவழி இல்லாமை ஆலோசிக்கப்பட வேண்டியதாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இப்படியான காரணங்களால் நிராகரிக்கப்பட்ட தபால் வாக்குகளின் எண்ணிக்கை 18000 என்பது குறிப்பிடத்தக்கது. வேண்டுமென்றே புல்லடி இடாத நிலையில் இந்த வாக்குச்சீட்டுகள் நிராகரிக்கப்பட்டிருப்பின் அது எப்பாதிப்பையும் ஏற்படுத்தாது. காரணம் அது அல்லவெனின் வீணாகும் வாக்குகள் பற்றி கவனம் செலுத்தவேண்டும்.

## தபால் வாக்கு : நிராகரிக்கப்படுவதை குறைப்பதற்கான உபாயங்களுக்கான யோசனைகளும் கருத்துக்களும்

எமது நாட்டில் பயன்பாட்டில் உள்ள தபால்மூல வாக்களிப்பு செயல்முறை பற்றி பொதுமக்களுக்கு சரியான புரிந்துணர்வு உள்ளதா என்பது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அது, தேர்தல் கடமைகளில் ஈடுபடுபவர்களுக்கு ஏற்படுத்தப்படும் வசதியே தவிர வரப்பிரசாதம் அல்ல. அந்தவகையில் அனுமதிக்கப்பட்ட 7 இலட்சத்திற்கும் சற்று அதிகமான அரச ஊழியர்களும் இந்த வசதியை பாரதூரமான ஒன்றாக கருதுத்தல் வேதனைக்குரியது.

இலங்கையில் தேர்தல் செயல்முறைகளை அதிக காலம் நடைமுறைப்படுத்தி வந்த முக்கியச் சட்டமான 1946 ஆண்டின் அரச கட்டளைச் சட்டத்தில் தபால் வாக்களார்கள் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்று தொடக்கம் இது வரை அதில் புதிய விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. கடந்த 07 தசாப்தங்களுக்கு முன்னரும் அதேபோல் இன்றும் ஒரு தபால் வாக்காளர் பூர்த்தி செய்யவேண்டிய படிவத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்படவில்லை. எனினும், படிப்படியாக அதிகரித்த அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது நிராகரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை கணிசமான அளவில் அதிகரிப்பை காட்டுகிறது.

எவ்வாறாயினும், கடந்த பாராளுமன்றத் தேர்தல் இந்த விடயத்தில் சாதகமான பலனை தந்திருக்கின்றது. அத்தேர்தலில் முன்னணி சுகாதார பணியாளர்களாக விளங்கும் 14,562 பேருக்கு தபால்மூலம் வாக்களிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் இந்த போக்கு ஒரு நெருக்கடி இல்லாத காலப்பகுதியிலும் நடைமுறைப்படுத்தப்படும் என்பதில் தெளிவின்மை காணப்படுகிறது.

அடுத்து முக்கியமாக பார்க்கப்படும் காரணி யாதெனில், தேர்தல் செயல்முறையுடன் சம்பந்தப்பட்டதாக முன்னெடுக்கப்பட வேண்டிய விழிப்புணர்வு அல்லது திருத்த யோசனைகள் அந்தந்த துறையை மட்டும் இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுவதானது எந்தப் பயனையும் தராது என்பதாகும்.

## பரிந்துரைகள் - யோசனைகளும் மூலோபாயங்களும்

## குறுகியகால பரிந்துரைகள்

### மொத்த தேர்தல் செயல்முறை பற்றி போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்

i. இந்தப் பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு மட்டும் உரியதல்ல. அதேபோல் ஒரு சில நிறுவனங்கள் அல்லது அமைப்புகளாலும் அதை நிறைவேற்ற முடியாது. இது முறையான ஒருங்கிணைத்தலுடன் ஓரிடத்திலிருந்து செயற்படுத்த வேண்டிய முறையான ஒரு நடவடிக்கையாகும். தேர்தல் அவதானிப்பு நிறுவனங்கள் இதற்குத் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகளை நிறைவேற்றலாம். தேர்தல் ஆணைக்குழு அதற்கான பூரண நுணுக்கங்களை வழிப்படுத்தும் பங்காளராக இருக்கவேண்டும்.

ii. வாக்காளர் இடாப்பு ஊடாக தம்மை பதிவு செய்துகொள்ளுதல் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டம், தமக்குரிய தொடர் இலக்கம் பற்றி வாக்காளர்கள் புரிதலுடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டும். (தேர்தல் மாவட்டம், வாக்கெடுப்பு மாவட்டம் ஆகியவை பற்றிய எந்த விளக்கமும் வாக்காளர்களுக்கு இல்லை.)

iii. ஒரு தபால் வாக்குக்கான செலவை உள்ளடக்கி அதன் முக்கியத்துவத்தையும் மொத்த செயல்முறை பற்றியும் படிப்படியாக விபரிக்கும் அசைவூட்டல் (அனிமேசன்) காணொளிகள் அத்தடன் விளக்கத் தாள்களைத் தயாரிக்கவேண்டும். அதில் அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தருக்கான பொறுப்புகளையும் உள்ளடக்க முடியும்.

iv. சகல மாவட்ட தேர்தல் அலுவலகங்களிலும் (கச்சேரி) பிரதேச செயலகங்களிலும் (பிரதேச செயலகத்தின் ஆளுகை பிரதேசத்திற்குரிய வாக்கெடுப்பு பிரிவின் பட்டியல் மட்டும்) இன்னும் பல இடங்களிலும் வாக்களார் இடாப்பு பார்வைக்கு வைக்கப்படுகிறது. ஆகவே, உரிய இடங்களுக்குச் சென்று நமது பெயர் வாக்காளர் இடாப்பில் உள்ளதா என்பதை சரி பார்த்துக்கொள்ள தபால் வாக்காளர்களை முடிந்தவரையில் ஊக்குவிக்க வேண்டும்.

v. தொடர்ச்சியாக தமது கடமையினை தவறவிட்டு பொறுப்பின்றி நடந்துகொள்கின்ற தபால் வாக்கு சீட்டு அத்தாட்சிப்படுத்துனர்கள் மற்றும் போலியான தகவல்களை வழங்கும் (உள்நோக்கத்துடன் மற்றும் உள்நோக்கமின்றி) சகலரையும் முறையாக இனம் காணும் வாய்ப்பு உள்ளதால் அவர்களின் தனிப்பட்ட கோப்புகளில் தவறுகளை பதிவிடக்கூடிய அறிக்கை ஒன்றை இணைக்க வேண்டும். படிவம் நிராகரிக்கப்படுவதற்கான காரணத்தை தெரிவத்தாட்சி அலுவலர் உதவி தெரிவத்தாட்சி அலுவலர் தெரியப்படுத்துவதால் அது சம்பந்தப்பட்ட நிறுவன ரீதியான விசாரணை ஒன்றை மேற்கொண்டு அறிக்கை சமர்பிக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவு வேண்டுகோள் ஒன்றை விடுப்பது காலத்தின் தேவையாகும்.

vi. தேர்தல் கடமைகளில் இணைத்துக்கொள்வதா இல்லையா என்பதை முடிவுசெய்தல் மற்றும் அதற்குச் சாமாந்தரமாக தபால்மூலம் வாக்காளிக்க உள்ளவர்களின் பிரதிபலிப்பை அறிந்துகொள்ளும் வழிமுறையை துரிதப்படுத்த முடியுமா என்பதை ஆராய்தல்.

vii. தபால்மூலம் வாக்களிக்க விருப்பம் தெரிவித்து பின்னர் அதை மாற்றிக் கொண்டால் நிறுவன மட்டத்தில் அதற்கான காரணத்தை கண்டறிந்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிக்கை ஒன்றை வழங்கமுடியும். அதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவின் பிரதிபலிப்பை சம்பந்தப்பட்ட ஊழியரின் தனிப்பட்ட கோப்பில் இணைக்க வேண்டும். அரச சேவையின் கடமைகளையும் பொறுப்புகளையும் வரையறை செய்யும்போது வாக்களித்தல் மற்றும் தபால்மூலம் வாக்களிக்க விண்ணப்பிப்பதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

**நீண்டகால பரிந்துரைகள்:**

வாக்காளர் இடாப்புத் திருத்தச் செயற்பாடுகளை கணினி மையப்படுத்தி, அதற்குரிய இற்றைப்படுத்தும் பணிகள் தானாக நடைபெறும் வகையில் மாற்றியமைக்க வேண்டும். இதை நடைமுறைப்படுத்தும்போது கையொப்பத்தை வைக்காதிருத்தல் / இலக்சினை பயன்பாடு மற்றும் தேர்தல் கடமைகளுக்காக அழைப்பதாக இல்லையா ஆகிய விடயங்களில் உறுதியான மற்றும் உடனடி புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள முடியும். இந்த ஒட்டுமொத்த செயற்பாட்டை டிஜிட்டல் மயப்படுத்தல் முதல் தேவையாக அமைவதால், ஏதாவதொரு மாவட்டத்தில் அதற்கான முன்னோடி திட்டத்தை ஆரம்பிக்கலாம்

## பயன்படுத்தப்பட்ட நூல்கள், ஆவணங்கள்


- ✓ இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு
- ✓ 1981 ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்
- ✓ 1981 ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்
- ✓ ஒரு வாக்கெடுப்பில் பயன்படுத்தவேண்டிய தபால்மூல வாக்களிப்பு ஒழுங்குமுறை பற்றிய நிறுவனத் தலைவர்கள் மற்றும் அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல்கள் (தேர்தல் ஆணைக்குழுவின் வெளியீடு)
- ✓ 1980 ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்யும் சட்டம்